1967 ஜூன் 26] [திரு. ஆ. கு. சுப்பையா]

என்று சொல்லப்படுகிறது. இதுபற்றியும் கவனம் செலுத்தி உடனடியாக விவசாயத்திற்கு மின்சாரம் தேவைப்படுகிற இடங்களில் மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளித்துள்ள சலுகையை வரவேற்று அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிப்பதோடு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு உள்ளது. சட்டப் பேரவையின் 6-வது விதியின்கீழ், கீழே குறிப்பிட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களை, மாற்றுத் தலைவர்களாக Panel of Chairmen மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கடை வைத்திருந்து முன்பணமாக வாங்கிய நூறு

1. திரு. ஏ. வி. பி. ஆசைதம்பி.
2. திரு. பெ. மலைச்சாமி.
3. திரு. எஸ். முருகையன்.
4. திரு. கா. வேழவேந்தன்.
5. திரு. தோ. மு. நல்லசாமி.
6. திரு. வி. கே. கோதண்டராமன்.

3. 1967–68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. ரா. ரெத்தின தேவர்:** உதவி சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்கான பட்ஜெட் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பொதுவாக ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம், புஞ்சை நிலங்களுக்கு வரி ரத்து செய்தது, பஸ்களை தேசியமயமாக்கியது ஆகிய எல்லாவற்றுக்கும் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அதேபோல் நஞ்சை நிலங்களுக்கும் இந்த அரசாங்கம் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நஞ்சை நிலங்களில் எல்லாம் நெல் பயிர் அதிகமாக விவசாயம் செய்யப்படுகிறது. அதே தருணத்தில் ஒரு எக்கர் நஞ்சை நிலத்தில் விவசாயம் செய்ய ஏறத்தாழ 150 ரூபாய், 200 ரூபாய் வரையிலும் விவசாயிகளுக்குச் செலவாகிறது. மேலும் விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட காலங்களில் ரசாயன உரங்களும் கிடைப்பதில்லை. அவர்கள் வெளி மார்க்கெட்டில் படி 2 ரூபாய்,